


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.12.2024) கோவை அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோவை அரசு பாலிடெக்னிக் கல்லூரி உள்பட 6 பாலிடெக்னிக் கல்லூரிகளில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில், Schneider (எஸ்னெய்டர்) எலக்ட்ரிக் வேர்ல்டு ஸ்கில் அகடெமி உடன் இணைந்து நிறுவப்பட்டுள்ள Smart Manufacturing Technology மையங்களை காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தலைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப. ராஜ்குமார், மாநகராட்சி மேயர் திருமதி கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், உயர்கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே. கோபால் தொழில்நுட்ப கல்வி இயக்கக ஆணையர் ஆபிரகாம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை துணை செயலாளர் மு. பிரதாப் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மா. சிவகுரு பிரபாகரன் துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன் உள்பட கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.12.2024) நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 29 அரசு பொறியியல் கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ள திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையங்களை காணொலி காட்சி மூலம் திறந்து வைத்து, கோவை அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையத்தை நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப. ராஜ்குமார், மாநகராட்சி மேயர் திருமதி கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், உயர்கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே. கோபால், தொழில்நுட்ப கல்வி இயக்கக ஆணையர் ஆபிரகாம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா. மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை துணை செயலாளர் மு. பிரதாப் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மா. .சிவகுரு பிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன் உள்பட கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டு மாணவர்களை முன்னேற்றப் பாதைக்கு

# ‘திராவிட மாடல்’ அரசு என்றென்றும் அழைத்துச் செல்லும்!

## கோவையில் ‘நான் முதல்வன்’ மையத் திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

கோவை,டிச.20-

**கோவை, அரசு தொழில்நுட்பக் கல்லூரியில், தமிழ்நாடெங்கும் உள்ள 29 பொறியியல் கல்லூரிகளில் ரூ.30.17 கோடி மதிப்பில், ‘நான் முதல்வன்’ திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையத் திறப்புவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு ‘நான் முதல்வன்’ திறன் மற்றும் வேலை வாய்ப்பு மையத்தைத் திறந்து வைத்தார்.**

அப்போது கோவை, அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து இன்று திறந்து வைத்த நிலையில், இம்மையத்தின் செயல்பாட்டுக்காக 29 கல்லூரிகளுக்கும் தலா 100 கணினிகள் வீதம் 2,900 கணினிகள் & நவீன தொழில்நுட்ப வசதிகளையும் மாணவர்களுக்கு வழங்கினார்.

இதைத் தொடர்ந்து மாணவ - மாணவியர் மத்தியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:

நம் மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, சட்டப்பேரவையில் நாம் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில், `நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் 31 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடெங்கும் 29 திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு மையங்களை கோவையில் இருந்து திறந்து வைப்பதில், மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த 29 திறன் பயிற்சி மையங்களும் உலகத் தரத்தில் இருக்க வேண்டும் என்று இங்கே கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 900 கணினிகளையும் சேர்த்து வழங்கி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சரின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ், கடந்த சில மாதங்களில் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் வாயிலாக, பணி வாய்ப்பினைப் பெற்றுள்ள 3 ஆயிரத்து 700 பேர்களில் சுமார் 30 மாணவர்களுக்கு இங்கு பணி நியமன ஆணைகளையும் வழங்க இருக்கிறோம்.

இதன் மூலம் ரூபாய் 3 லட்சத்திலிருந்து 42 லட்சம் வரைக்கும் ஆண்டு ஊதியத்தோடு பணி நியமனம் பெற்றுள்ள உங்கள் அத்தனைப் பேருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் ‘தமிழ்நாடு ஸ்கில் டெவலப்மெண்ட் கார்ப்பரேசன்’ சார்பாக, கோவை அரசு பாலிடெக்னிக் கல்லூரி உட்பட 6 பாலிடெக்னிக் கல்லூரிகளில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஸ்னேடர் எலக்ட்ரிக் வோல்டு ஸ்கில் அகாடமியுடன் இணைந்து, ஸ்மார்ட் மேனுபேக்சரிங் டெக்னாலஜி சென்டர்சையும் இன்று திறந்து வைத்து இருக்கிறோம்.

அது தவிர, இந்த ஆண்டுக்கான நிழல் திருவிழா, மேக்கத்தான்-2.0, நான் முதல்வன் திட்டத்தின்கீழ் சிறப்பான பயிற்சிகளை வழங்கிய திறன் பயிற்சியாளர்களுக்கும் இங்கே பரிசுத்தொகை வழங்கப்பட்டு இருக்கிறது.

### கோவை மாணவர்கள்!

கோவை மாணவர்களை சந்திக்கும்போது எப்போதுமே மனதுக்கு கொஞ்சம் இனிமையாக இருக்கும். ஏனென்றால், கோவை மாணவர்களாகிய நீங்கள் மிகவும் உற்சாகமானவர்கள், உறுதியானவர்கள். உங்களைப்பற்றிப் பேசினால் மட்டும்தான் நீங்கள் கைத்தட்டுவீர்கள். அந்த அளவிற்கு மிகவும் திறமையானவர்கள்.

எல்லோரையும் போல படித்தோம், வேலைக்குச் சென்றோம், என்று நினைப்பவர்கள் நீங்கள் இல்லை. கோவை மாணவர்களாகிய நீங்கள் படித்து முடித்து விட்டு, ஒரு 4 பேருக்காவது வேலை கொடுக்க வேண்டும் என்ற உறுதியோடு படிக்கிறவர்கள்.

அதனால்தான் கோவை மாணவர்களை நாம் எப்போதும் `ஸ்டூடன்ட் கம்யூனிட்டி’ என்று பார்ப்பதில்லை. `எதிர்கால என்டர்பிரைசஸ் கம்யூனிட்டி’ என்றுதான் கோவை மாணவர்களை இந்த `திராவிட மாடல் அரசு’ பார்க்கிறது.




### திராவிட மாடல் ஃபார்முலா!

குறிப்பாக, பொறியியல் மாணவர்கள், நிறைய ஃபார்முலாக்கள் படிப்பீர்கள். அதேபோல், தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒட்டுமொத்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ற ஃபார்முலா என்னவென்றால், அதுதான் நம் முதலமைச்சரின் `திராவிட மாடல் ஃபார்முலா’.

பேரறிஞர் அண்ணா தமிழ்நாடு முழுக்க பள்ளிக்கூடங்களைத் திறந்தார். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏராளமான கல்லூரிகளைத் திறந்தார். பல முதல் தலைமுறைப் பட்டதாரிகளை உருவாக்கியது கலைஞரின் அரசு. இன்றைக்கு நம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள், முதல் தலைமுறைப் பட்டதாரிகள் அனைவரும் பணிக்குச் செல்ல வேண்டும், அதுமட்டுமல்ல, தொழில்முனைவோர் ஆக வேண்டும் என்றுதான், நான் முதல்வன் என்ற கனவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். முதலமைச்சர் அவர்கள் அவர்களின் பிறந்தநாளில் துவக்கி வைத்தது, இந்த நான் முதல்வன் திட்டம்.

### புதுடெல்லி ஆய்வுக் கூட்டம்!

இன்றைக்கு இந்த நான் முதல்வன் திட்டத்தை இந்தியாவே, ஏன் ஒட்டுமொத்த உலகமே புகழ்ந்து கொண்டு இருக்கிறது. சமீபத்தில், புதுடெல்லியில் அனைத்து மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களோடு ஒரு ஆய்வுக் கூட்டம் நடந்தது. அதில் நம் அரசு சார்பாக தலைமைச் செயலாளர் அவர்கள் கலந்துகொண்டார். கலந்துகொண்டது மட்டுமல்லாமல், ஒவ்வொரு மாநிலத்திலும் என்னென்ன திட்டங்கள் செய்கிறார்கள் என்று, அந்தக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.

நம் தலைமைச் செயலாளர் அந்தக் கூட்டத்தில் இந்த நான் முதல்வன் திட்டத்தைப் பற்றி விளக்கிக் கூறி இருக்கிறார். அதைப் பார்த்து அங்கு இருந்த அனைத்து தலைமைச் செயலாளர்களும் பாராட்டி, தமிழ்நாட்டிற்கு ஒரு பெருமை சேர்த்து இருக்கிறார்கள் என்றால், அந்த வெற்றியில் அரசுக்கு மட்டுமல்ல, அதிகாரிகளுக்கு மட்டுமல்ல, அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு வரும் மாணவச் செல்வங்கள், இளைஞர்கள் உங்களின் பங்களிப்பு மிக, மிக முக்கியமானது. அதற்கு உங்களுக்கு பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நான் முதல்வன் திட்டம்!

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பள்ளிகளில் வழிகாட்டி வகுப்புகள், கல்லூரிகளில் திறன் பயிற்சிகள், வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. நான் முதல்வன் திட்டம் இதுவரை 30 லட்சம் இளைஞர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்திருக்கிறது.

இதுவரைக்கும் 2 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. வேலைக்குச் செல்வதற்கான திறன் எல்லோருக்கும் இருக்கும். ஆனால், அந்த வேலையை எப்படிப் பெறுவது என்பதற்கான திறன் இருக்குமா என்றால், அது ஒரு கேள்விக்குறி. அதனால்தான் இந்த திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையங்களை உருவாக்குகிறோம்.

### லண்டனில் திறன் பயிற்சி!

இதன் மூலம் புதிய திட்ட யோசனைகள் (New Project Ideas), தகவல் தொடர்பு திறன் (Communication Skills), சிக்கலைத் தீர்க்கும் திறன் (Problem Solving Ability)இப்படி இன்றைய கார்ப்பரேட் உலகத்திற்குத் தேவையான அனைத்துத் திறன்களும் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு உலகளாவிய எக்ஸ்போஸர் இருக்க வேண்டும். ஜெர்மன், ஜப்பானிஸ், பிரெஞ்சு மாதிரியான வெளிநாட்டு மொழிகள் இந்த மையங்கள் வாயிலாக கற்றுத் தரப்படுகின்றன.

வெளிநாடுகளில் ஜாப் மார்க்கெட் (வேலை வாய்ப்புச் சந்தை) எப்படி இருக்கிறது. அங்கே என்னென்ன வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. அதை நம் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று, நான் முதல்வன் திட்டத்தின்கீழ் `ஸ்கவுட்’ என்ற முன்னெடுப்பின் மூலம் இருபத்தைந்து மாணவர்கள் இந்த ஆண்டு நான் முதல்வன் திட்டத்தின் மூலம் லண்டன் சென்று வந்தார்கள்.

குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் இருக்கின்ற ஊட்டி அருகே குந்தாவிலிருந்து தங்கை அமிர்தா அந்தக் குழுவில் இடம்பெற்று லண்டன் சென்று வந்தார். தேயிலைத் தோட்ட தொழிலாளியின் மகளான அமிர்தா லண்டன் பிர்ஹாம் பல்கலைக்கழகத்திற்குச் சென்று திறன் பயிற்சி எடுத்துக்கொண்டு வருகிறார் என்றால், அதுதான் நம் திராவிட மாடல் அரசின் வெற்றி.

### அமிர்தாவின் லண்டன் பயணம்!

அந்தப் பயிற்சியை எடுத்துகொண்டு வந்த கிட்டத்தட்ட 15 பேர் என் இல்லத்திற்கு வந்து என்னை நேரில் சந்தித்தார்கள். அப்போது சகோதரி அமிர்தா சொன்ன வார்த்தைகளை என்னால் மறக்க முடியாது. இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டு இருக்கின்றன. அவர் சொன்ன வார்த்தை. `

`நான் முதல்வன் திட்டத்தின் மூலம் லண்டன் சென்று வந்தீர்களே? உங்களுக்கு உபயோகமாக இருந்ததா இந்தப் பயணம்? எப்படி நினைக்கிறீர்கள்’ என்று நான் கேட்டேன்.

அவர் சொன்ன வார்த்தை. ``அண்ணா வாழ்க்கையில் முதன்முறையாக விமானத்தில் சென்றேன். என்றைக்கும் இந்தப் பயணத்தை என் வாழ்க்கையில் மறக்க முடியாது. இன்றைக்கு என் வாழ்க்கையின் மீது, ஒரு புதிய நம்பிக்கை வந்து இருக்கிறது” என்று அமிர்தா சொன்னார்.

அதுமட்டுமல்ல, ``ஒரு குக்கிராமத்தில் இருந்து லண்டன் போய் நான் நிறைய கற்றுக்கொண்டு வந்திருக்கிறேன். `இப்போது உன்னைப் பார்த்து நம் ஊர் பெண்களுக்கும் உன்னைப் போல படிப்பதற்கும், பறப்பதற்கும் ஆசைப்படுகிறார்கள்’ என்று என் அப்பா, அம்மா சொன்னார்கள்” என்று தங்கை அமிர்தா அவர்கள் என்னிடம் சொன்னார்.

இப்படி தங்கை அமிர்தா சொன்னபோது, எனக்கு ஏற்பட்ட அந்த மன மகிழ்ச்சியை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அந்த அளவிற்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. இப்படி இன்னும் பலநூறு அமிர்தாக்களை உருவாக்கத்தான், இந்த திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையங்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இது உங்களின் பாடத் திறனுக்கும், வேலை வாய்ப்புத் திறனுக்கும் இருக்கின்ற இடைவெளியை நிச்சயம் நிரப்பும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. கல்லூரிக்கும், தொழிற்சாலைகளுக்கும் இருக்கின்ற ஒரு பாலமாக இந்த மையங்கள் செயல்படும்.

### யார் வேண்டுமானாலும் அணுகலாம்!

நாம்தான் பட்டம் பெற்று விட்டோமே? வேலை வாய்ப்பு மையங்கள் மூலமாக வேலையும் வாங்கிவிட்டோமே என்று நீங்கள் அலட்சியமாக இருந்துவிடகூடாது. ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது ஒரு புது திறனை வளர்த்துக்கொள்வதற்கான, கற்றுக்கொள்வதற்கான அந்த முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டும். அப்போதுதான், இப்போது இருக்கின்ற டிரெண்டிங்கில் இருக்க முடியும். அதற்கு உங்களுக்கு எப்போதுமே `நான் முதல்வன் திட்டம்’ துணை நிற்கும்.

உங்களுக்குத் தேவையான வேலைவாய்ப்பினை உருவாக்கித் தர இந்த அரசு எப்போதுமே உங்களுக்குத் துணை நிற்கும். இன்றைக்கு இங்கு தொடங்கப்படுகின்ற வேலைவாய்ப்பு மையங்களை, திறன் பயிற்சி தேவைப்படுவோர், வேலை தேடுவோர் என யார் வேண்டுமானாலும் அணுகலாம்.

இந்த மையங்கள் மூலம் பல ஆயிரம் மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற வேண்டும். தொழில்முனைவோராக உயர வேண்டும். மேலும், இங்கு பணி நியமன ஆணைகளைப் பெறுபவர்கள், சிறந்த பயிற்றுநருக்கான பரிசுத் தொகை பெறுபவர்கள் என அனைவருக்கும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் திராவிட மாடல் அரசு என்றென்றும் துணை நிற்கும். கரம் பிடித்து முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று சொல்லி, இந்த வாய்ப்பை வழங்கிய அத்தனைப்பேருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

இந்நிழ்ச்சியில் அமைச்சர்கள் செந்தில்பாலாஜி, கோவி.செழியன், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், அரசு கூடுதல் தலைமச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., உயர்கல்வித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் கோபால் ஐ.ஏ.எஸ்., தொழில்நுட்ப கல்வி இயக்கத்தின் ஆணையர் ஆப்ரகாம் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் இன்னசென்ட் திவ்யா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் ஐ.ஏ.எஸ்., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் துணைச் செயலாளர் பிரதாப் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஐ.ஏ.எஸ்., துணை மேயர் வெற்றிச்செல்வன், கல்லூரி முதல்வர் முனைவர் மனோன்மணி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவில் நடைபெற்ற 6–வது உலக கேரம் போட்டிகளில் தனிநபர், இரட்டையர் பிரிவு, குழு போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கு சிறப்பு சேர்த்த செல்வி. எம். காசிமாவுக்கு நேற்று முன்தினம் (18.12.2024) சிறப்பு ஊக்க தொகையாக ரூ.1.00 கோடிக்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவில் நடைபெற்ற 6–வது உலக கேரம் போட்டிகளில் தனிநபர், இரட்டையர் பிரிவு, குழு போட்டிகளில் தங்கப்பதக்கம் உள்ளிட்ட பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்கு சிறப்பு சேர்த்த செல்வி. எம். காசிமா, செல்வி. வி.மித்ரா, செல்வி. கே.நாகஜோதி ஆகியோருக்கு நேற்று முன்தினம் (18.12.2024) சிறப்பு ஊக்க தொகையாக மொத்தம் ரூ.2.00 கோடிக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.